# Sample Question paper ( Tamil )

மாதிரி வினாத்தாள் - தமிழ்
பத்தாம் வகுப்பு (Class - X)
ஏப்ரல் 2011 - செப்டம்பர் 2011
I - TERM (April 2011 - SEP 2011)

Max. Marks : 80 — Time Allowed : 3 Hours
மொ.மதிப்பெண் கள்: 80 — கால அளவு : 3 மணி

The question paper is diveded in to four sections:
இக் கேள்வித் தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| **SECTION : A**<br>பிரிவு: அ | Reading comprehension<br>படித்தல் (உரைநடைப் பகுதி) | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : B**<br>பிரிவு: ஆ | **Writing**<br>எழுதுதல் | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : C**<br>பிரிவு: இ | Grammar<br>இலக்கணம் | - 15 Marks<br>-15 மதிப்பெண்கள் |
| **SECTION : D**<br>பிரிவு: ஈ | **Literature / Text Books**<br>இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | - 35 Marks<br>-35 மதிப்பெண்கள் |

★ எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும்.
★ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பிரிவு - அ

படித்தல் - 15 மதிப்பெண்

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

வேட்கையும் விருப்பமும் மனிதனையே ஏன் உலகினையே ஆட்டிப் படைக்கும் சுழற்காற்று சூறாவளி. பொருள் வேட்கை, பொன்

வேட்கை, மண் வேட்கை பலவற்றையும் பற்றித் தொல்லை தரும் நச்சரவம். அந் நச்சரவத்திற்கு மேலும் மேலும் பாலூற்றி வளர்ப்பது ஆசை மனமே. அறத்தை அழிக்கத் தொடங்கும் அழி பொருள் எனத் தெரிந்தும் அதனை வெறுக்க முடிவதில்லை. நம்மையும் அழிக்குமென அறிந்தும் நாம் அதனை விட்ட அகல இயலுவதில்லை. ஆசை மிகுதியாக மிகுதியாகப் பிறர் பொருளைக் கவர வேண்டும் என்ற தீரா விருப்பு - தணியா வேட்கை - மனிதனை எப்படியெல்லாமோ அலைக்கழிக்கிறது. `ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்' என்பது திருமூலரின் தெய்வத் தாரக மந்திரம். `வேண்டாமையன்ன விழுச் செல்வம் ஈண்டில்லை' என்பது திருக்குறளின் தனிக்குரல். பொருள் உலகை வெறுத்து அருள் உலகை நாடிய அருள் ஞானி, போதி மரத்துப் புத்தர் பிரானின் புனித மொழியும் `ஆசையறுமின்' என்பதே. `துன்பத்திற்கு மூலகாரணம் ஆசையே' என்றார் முழுதும் துறந்து முற்றுணர்ந்த அவ்வருள் ஞானி. அறிவின் வழிச் செல்லாது ஆசை வழிச் சென்று அல்லற்படுவது மனித மனம்.

<u>வினாக்கள்:</u>

1. அறத்தை அழிக்கத் தொடங்கும் அழிபொருள்
    அ). அன்பு மனம்
    ஆ). ஆசை மனம்
    இ). பக்தி மனம்
    ஈ). அருள் மனம்

2. `அரவம்' என்பதன் பொருள்
    அ).பல்லி
    ஆ). முதலை
    இ). பாம்பு
    ஈ). தேள்

3. முற்றுணர்ந்த ஞானி
    அ). புத்தர்
    ஆ). திருவள்ளுவர்
    இ). திருமூலர்
    ஈ). திருநாவுக்கரசர்

4. மனித மனம் அல்லாடாதிருக்க எதன் வழிச் செல்ல வேண்டும்?

அ). அன்பு

ஆ). ஆசை

இ). பக்தி

ஈ). அறிவு

5. கடவுள் மீது கொண்ட ஆசையையும் அறுமின் எனக் கூறியவர்

அ). புத்தர்

ஆ). வள்ளுவர்

இ). திருமூலர்

ஈ). திருநாவுக்கரசர்

**2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

உலகம் - நிலம், நீர், காற்று, தீ, வானம் ஆகிய ஐம்பெரு பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது. அவற்றின் இயக்கங்களால் உலகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது. அவற்றுள்ளும் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்க இயலாது. அதனால் தான் வள்ளுவர் 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறிப் போந்தார். அந் நீரைத் தருகின்ற மழையின் சிறப்பை உணர்ந்து திருக்குறளில் வான் சிறம்பு என்றோர் அதிகாரமும் படைத்துப் புகழ்ந்து உரைக்கின்றார் அப் பெருமகனார். மேலும் வானம், தன் பயனாகிய மழையைத் தராவிடில் இவ்வுலகில் தானம், தவம் ஆகிய இரு பெருஞ் செயல்களும் நடைபெறாவென்றும், மழைப் பயன் குன்றுமாயின் தெய்வ வழிபாடுகளும் குன்றும் என்றும் அவர் கூறுகின்றார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்று மழையைப் போற்றி வணங்கியே தம் காப்பியத்தைத் தொடங்குகிறார்.

<u>வினாக்கள்:</u>

1. இவ்வுலகம் எவற்றின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது?

அ).எண் குணம்

ஆ). சூரியன், சந்திரன்

இ). பஞ்ச பூதம்

ஈ). ஏழு சுரங்கள்

2. உலகில் உயிர் இயங்க உதவுவது

அ). நெருப்பு

ஆ). நீர்

இ). நிலம்

ஈ). வானம்

3. மழையைப் போற்றி வணங்கி தொடங்கப்பட்ட காப்பியம்

அ). மணிமேகலை

ஆ).குண்டலகேசி

இ). சீவக சிந்தாமணி

ஈ). சிலப்பதிகாரம்

4. மழை பெய்யாவிடில் இவ்வுலகில் நடைபெறா இரு செயல்கள்

அ). அன்பு அருள்

ஆ). தானம் தவம்

இ). அடக்கம் பொறுமை

ஈ). மானம் மரியாதை

5. வான்சிறப்பு என்பது எதனைக் குறிக்கின்றது?

அ). விண்மீன்களின் சிறப்பை

ஆ). வானத்தின் சிறப்பை

இ). மழையின் சிறப்பை

ஈ). நிலத்தின் சிறப்பை

**3. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

மக்கள் அனைவரும் நெடுநாள் வாழவே விரும்புவர். நெடுநாள் வாழ நல்ல உடல் வேண்டும். எனவேதான் திருமந்திரத்தில் திருமூலர், 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேன்' என்றார். உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவு, உடலைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். 'பசித்துப் புசி' என்பது தான் நம் நாட்டில் வழங்கும் பழமொழி. எனவே, நாம் நமது சூழ்நிலைக்கு ஏற்ற சத்தான உணவை அளவோடு உண்ண வேண்டும். ஆனால் இன்று மக்கள் துரித உணவையே விரும்பி உண்கின்றனர். அவற்றால் ஏற்படும்

நோய்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அவை பெருமளவு கொழுப்புச் சத்தையே கொண்டவை. குளிர் நாடுகளான மேலை நாடுகளுக்குப் பொருந்துமேயன்றி வெப்பம் மிகுந்த நமது நாட்டுக்கு அவை பொருந்தா.

__வினாக்ளகள்:__

1. மக்கள் எப்படி வாழ விரும்புவர்?
   அ). மகிழ்ச்சியோடு வாழ விரும்புவர்
   ஆ). நீண்ட நாள் வாழ விரும்பவுர்
   இ). நோயின்றி வாழ விரும்புவர்
   ஈ). நல்லவராக வாழ விரும்புவர்

2. இப்பத்தியில் இடம் பெற்றுள்ள பழமொழி
   அ). ருசித்துப் புசி
   ஆ). குளித்துப் புசி
   இ). பசித்துப் புசி
   ஈ). அளவோடு புசி

3. திருமந்திரம் இயற்றியவர்
   அ). திருவள்ளுவர்
   ஆ). திருமூலர்
   இ). இளங்கோ
   ஈ). திருஞான சம்பந்தர்

4. நாம் உண்ணும் உணவு
   அ). உள்ளத்தைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும்
   ஆ). உயிரைப் உள்ளத்தைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும்
   இ). உடலைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும்
   ஈ). நோயிலிருந்து பாதுகாப்பதாக இருக்க வேண்டும்

5. துரித உணவுகள் பெரும்பாலும்
   அ). புரதச் சத்துடையவை
   ஆ).மாவுச் சத்துடையவை
   இ). நார்ச் சத்துடையவை
   ஈ).கொழுப்புச் சத்துடையவை

## பகுதி - ஆ

1. நீ கண்டு களித்த இடம் குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக (6)

(அல்லது)

நூலக வசதி வேண்டி பொது நூலகத் துறை இயக்குநருக்குக் கடிதம் எழுதுக.

★ [உமது முகவரி: அன்புச் செலவன்/ அன்புச் செல்வி, 10. அண்ணா தெரு, இளங்கோ நகர், சென்னை - 15 எனக் கொள்க.]

2. ஏதேனும் ஒரு பகுதியிலுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. (6)

அ). முன்னுரை - பிறப்பும் இளமையும் - விடுதலை வேட்கை - தேசியக் கவிஞர் பாரதியார் - முன்னறி புலவர் பாரதி - அவர் ஆற்றிய சமுதாயத் தொண்டு - முடிவுரை.

ஆ). முன்னுரை - அறிவியலின் இன்றியமையாமை - தொலைத் தொடர்புத் துறை - கல்வித் துறை - தொழில் துறை - வேளாண் துறை - மருத்துவத் துறை - முடிவுரை.

இ). முன்னுரை - நோயற்ற வாழ்வு - உடற் பயிற்சி - உணவு வகைகள் - சுற்றுப் புறத் தூய்மை - நல்ல பழக்கங்கள் - முடிவுரை.

3. உமது பகுதியில் நடைபெற்ற கண் தான முகாம் குறித்து அறிக்கை ஒன்று எழுதுக. (3)

(அல்லது)

உமது பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழா குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.

## பகுதி - இ

1. சான்று தருக. (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) (3)

i). வினை முற்று

அ). வளவன் நடந்தான்

ஆ). நடந்த வளவன்
இ). கண்டனன் வணங்கினான்
ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

ii). வினாவெதிர் வினாதல் விடை
அ). செய்
ஆ). செய்யாமலிருப்பேனா?
இ). செய்வேன்
ஈ). செய்யேன்

iii). இனங்குறித்தல்
அ). பழம் தின்றான்
ஆ). வெற்றிலை மென்றான்
இ). தேநீர் அருந்தினான்
ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

iv). அடுக்குத் தொடர்
அ). அன்றே அன்றே
ஆ). மீமிசை
இ). சலசல
ஈ). ஒருதனி

v). முற்றெச்சம்
அ). போற்றி வணங்கினான்
ஆ). போற்றினன் வணங்கினான்
இ). வணங்கிப் போற்றினான்
ஈ). மேற்கூறிய எதுவுமில்லை

**2. நிரப்புக (எவையேனும் மூன்றை மட்டும்)** **(3)**

i). 'ஐ' என்னும் நெடில் எழுத்துக்குரிய மாத்திரை ----------
அ). அரை
ஆ). ஒன்று
இ). இரண்டு
ஈ). மூன்று

ii).ஓர் எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிவது ------ தொடர்.

அ). தனிநிலைத் தொடர்

ஆ). கலவைத் தொடர்

இ). கட்டளைத் தொடர்

ஈ). தொடர் நிலைத் தொடர்

iii).செய்பவன், கருவி, நிலம் முதலான ஆறனையும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று ----------

அ). குறிப்பு வினைமுற்று

ஆ). தெரிநிலை வினை முற்று

இ). பெயரெச்சம்

ஈ). வினையெச்சம்

iv).உவமை, உவமேயம் இவற்றுக்கிடையே உவம உருபு வெளிப்படையாக வருவது ----------

அ). தொகையுவமை

ஆ). உருவகம்

இ). விரியுவமை

ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

v). வினா ------ வகைப்படும்.

அ). நான்கு

ஆ). ஏழு

இ). ஆறு

ஈ). எட்டு

**3. கூறியவாறு செய்க. (எவையேனும் மூன்றை மட்டும்) (3)**

i).குழந்தை சிரித்தது (சரியான இரட்டைக் கிளவியைச் சேர்க்க)

அ). குழந்தை படபடவெனச் சிரித்தது.

ஆ). குழந்தை கலகலவெனச் சிரித்தது

இ). குழந்தை மடமடவெனச் சிரித்தது.

ஈ). குழந்தை தகதகவெனச் சிரித்தது.

ii). கயல் போன்ற விழி (தொகையுவமையாக்குக)

அ). கயல்விழி

ஆ).கயலாகிய விழி

இ). கயலின் விழி

ஈ). கயலது விழி

iii). பாத மலர் (உருவகமாக மாற்றுக)

அ). பாதமாகிய மலர்

ஆ). மலர்ப் பாதம்

இ). மலர் போன்ற பாதம்

ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

iv). கற்றாள் (பிறவினையாக்குக)

அ). கற்றனள்

ஆ). கற்கின்றாள்

இ). கற்பித்தாள்

ஈ). கற்பாள்

v). சென்றாள் கோதை (எதிர்காலப் பெயரெச்சமாக்குக)

அ). கோதை சென்றாள்

ஆ). சென்ற கோதை

இ). செல்கின்ற கோதை

ஈ). செல்லும் கோதை

**4. இலக்கணக் குறிப்பு தருக. (மூன்றுக்கு மட்டும்)** **(3)**

i).அந்தமான் என்பது

அ). பொது மொழி

ஆ). தனி மொழி

இ). தொடர் மொழி

ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

ii). பெற்றங்கள் பால் சொரிந்தன.

அ). இனங்குறித்தல்

ஆ). வெளிப்படை

இ). ஒன்றொழிப் பொதுச் சொல்

ஈ). அடுக்குத் தொடர்

iii). நடுமையம்

அ). ஒன்றொழிப் பொதுச் சொல்

ஆ). ஒரு பொருட் பன்மொழி

இ). இனங்குறித்தல்

ஈ). அடுக்குத் தொடர்

iv). கவனமாகப் படி

அ). கட்டளைத் தொடர்

ஆ). செய்தித் தொடர்

இ). தன்வினைத் தொடர்

ஈ). செய்வினைத் தொடர்

v). மருண்ம்

அ).ஐகாரக் குறுக்கம்

ஆ). ஔகாரக் குறுக்கம்

இ). மகரக் குறுக்கம்

ஈ). ஆய்தக் குறுக்கம்

**5. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்) (3)**

i) அ).சொல்லுக்கு முதலில் வரும் ஐகாரம் ஒன்றரை மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும்.

ஆ). சொல்லுக்கு முதலில் வரும் ஐகாரம் ஒரு மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும்.

இ). சொல்லுக்கு முதலில் வரும் ஐகாரம் அரை மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும்.

ஈ). சொல்லுக்கு முதலில் வரும் ஐகாரம் இரண்டு மாத்திரையாகவே ஒலிக்கும்.

ii). அ). அவன் கவிஞன் அன்று.

ஆ). அவன் கவிஞன் அல்லன்.

இ). அவன் கவிஞன் அல்ல.

ஈ). அவன் கவிஞன் அல்லள்.

iii). அ). இளங்குழந்தை அழத் தொடங்கியது.
ஆ). இளங்குழந்தை அழத் தொடங்கினான்.
இ). இளங்குழந்தை அழத் தொடங்கினாள்.
ஈ). இளங்குழந்தை அழத் தொடங்கின.

iv). அ). கோழி அலறும்.
ஆ). கோழி முழங்கும்.
இ). கோழி கத்தும்
ஈ). கோழி கொக்கரிக்கும்

v). அ). நம்பிக்கை தான் வாள்வின் உயிர்நாடி.
ஆ). நம்பிக்கை தான் வால்வின் உயிர்நாடி.
இ). நம்பிக்கை தான் வாழ்வின் உயிற்நாடி.
ஈ). நம்பிக்கை தான் வாழ்வின் உயிர்நாடி.

### பிரிவு - ஈ

**1. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)**

'விறுடை செம்மொழி தமிழ் மொழி உலகம் வேரூன்றிய நாள்முதல் உயிர் மொழி' என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றுவார் பாவலேறு பெருஞ்சித்திரனார். 'திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்' என்று பரிதிமாற் கலைஞர் செம்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். 'தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை முதலான பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி; அதுவே நம்மொழி' என்பார் பாவாணர். உலகில் ஈராயிரம் ஆண்டுகட்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொன்மையுடைய மொழிகள் சிலவே. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஈப்ரு, கிரேக்கம் ஆகியன. இவற்றுள் இலத்தீனும் ஈப்ருவும் வழக்கிழந்து போயின. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு தனிச் சிறப்புடையது. 'தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது' என்பார் கெல்லட். அகத்தியமும் தொல்காப்பியமும் இக் கூற்றுக்குச் சான்றாகத் திகழ்கின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என உலக மக்களை ஒன்றிணைத்து

உறவுகளாக்கிய உயர் சிந்தனை மிக்கது புறநானூறு.' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று திருக்குறள் உலகுக்கு எடுத்துரைக்கிறது. அது மக்கட் பண்பில்லாதாரைப் பதர் எனப் பழிக்கின்றது. இவையெல்லாம் தமிழ் மொழிக்குரிய விழுமிய சிந்தனைகள்.

**வினாக்கள்:**

1. 'திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய் மொழி தமிழ்ச்செம்மொழியாம்' என்று கூறியவர்
   அ). பாவாணர்
   ஆ). சூரிய நாராயண சாஸ்திரியார்
   இ). பாவலேறு பெருஞ்சித்திரனார்
   ஈ). கெல்லட்

2. வழக்கிழந்த பழமையான மொழிகள்
   அ). கிரேக்கம் - ஈப்ரு
   ஆ). சமஸ்கிதம் - ஈப்ரு
   இ). இலத்தீன் - ஈப்ரு
   ஈ). சீனம் - ஈப்ரு

3. 'கேளிர்' என்பதன் நேர்ப் பொருள்
   அ). நண்பர்
   ஆ). பகைவர்
   இ). சகோதரர்
   ஈ). உறவினர்

4. அகத்தியமும் தொல்காப்பியமும்
   அ). இலக்கிய நூல்கள்
   ஆ). இலக்கண நூல்கள்
   இ). ஆராய்ச்சி நூல்கள்
   ஈ). ஒப்பாய்வு நூல்கள்

5. மக்கட் பண்பில்லாதவரைப் பதர் எனப் பழிக்கும் நூல்
   அ). புறநானூறு
   ஆ). சிலப்பதிகாரம்
   இ). திருக்குறள்
   ஈ). பத்துப்பாட்டு

2. கீழ் வரும் பத்தியைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு உரிய சரியான விடைகளை எழுதுக. (5)

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக்கலையும் ஒன்று. இது நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமையத் தக்க அரியதொரு கலை. மேடைப் பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி என்றாலும் அக் கருத்துகளை வெளியிடும் மொழியும் முறையும் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன. பேச்சுக் கலையில் வெற்றி பெற வலிமையான கருத்துகள் தேவை. நாம் சொல்லுகின்ற செய்தியை ஒருவரிடம் மிகவும் விரைவாகச் சொல்லுதல் கூடாது. சொல்லியதையே திரும்பத் திரும்பச் சொல்லுதல் தவறு. நாம் சொல்ல நினைப்பதைத் தெளிவாகச் சொல்லுதல் வேண்டும். பேசும் பொருளை ஒழுங்கு முறைக்குக் கட்டுப்படுத்தித் தொடக்கம், இடைப் பகுதி, முடிவு எனப் பகுத்துப் பேசுவதையே பேச்சு முறை என்கிறோம். இதனை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் எனவும் கூறலாம். தட்டுத் தடங்கலின்றிப் பேசுவதற்குத் தொடக்கமே அடித்தளமாகும். கேட்போரை வயப்படுத்தும் முறையில் பேச்சைத் தொடங்குதல் வேண்டும்.

<u>வினாக்கள்:</u>

1. அரியதொரு கலை
   - அ). பேச்சுக் கலை
   - ஆ). ஓவியக் கலை
   - இ). இசைக் கலை
   - ஈ). நடனக் கலை

2. மேடைப் பேச்சுக்கு இன்றியமையாத ஒன்று
   - அ). கருத்து
   - ஆ). சொல்
   - இ). வெளிப்பாடு
   - ஈ). நடிப்பு

3. பேச்சுக் கலையில் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
   - அ). தெளிவாகச் சொல்லல்
   - ஆ). உண்மை பேசுதல்
   - இ). திரும்பத் திரும்பச் சொல்லுதல்
   - ஈ). காலம் அறிந்து சொல்லுதல்

4. பேச்சுப் பொருளைப் பகுத்துப் பேசும் முறை

அ). எடுத்தல், தொடுத்தல், முடித்தல்

ஆ). திரும்பத் திரும்பச் சொல்லுதல்

இ). முன்னுரை, முடிவுரை, பொருளுரை

ஈ). மேற்கூறிய எதுவுமில்லை

5. பேசுவதற்கு அடித்தளமாவது

அ). இடைப்பகுதி

ஆ). முடிவு

இ). தொடக்கம்

ஈ). மேற்கோள்

**3. கீழ்க்காணும் பாடல் அடிகளைப் படிக்க. இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடைகளை எழுதுக. (4)**

'பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைப்படச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.'

<u>**வினாக்கள்:**</u>

1. துகிர் என்ற சொல் குறிக்கும் நவரத்தினங்களுள் ஒன்று

அ). மாணிக்கம்

ஆ). பவளம்

இ). கோமேதகம்

ஈ). மேற்கூறிய எதுவுமில்லை

2. இப்பாடல் உணர்த்தும் பொருள்

அ). நல்லோர் துன்பப் படுவர்

ஆ). தீயோர் வாழ்வர்

இ). இனம் இனத்தோடு சேரும்.

ஈ). மேற்கூறிய எதுவுமில்லை.

3. மாணிக்கம் பிறக்குமிடம்

அ). கடல்

ஆ). மலை

இ). காடு

ஈ). மூங்கில்

4. தொடை என்பதன் பொருள்

அ). உறுப்பு

ஆ). ஊர்

இ). ஆறு

ஈ). மாலை

**4. விடையளிக்க. (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) (5)**

அ). மேடைப் பேச்சின் இன்றியமையாமையை எழுதுக.

ஆ). தமிழ் மொழியின் இலக்கிய வளம் குறித்து எழுதுக.

இ). அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்.

**5. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (5)**

அ). மாணிக்கவாசகர் இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?

ஆ). குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்து எழுதுக.

**6. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (2)**

அ).மொழி மாற்றம் என்றால் என்ன?

ஆ). ஒழுக்கம் குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

**7. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (6)**

அ). மெல்ல மெல்ல மற - கதையை சுருக்கி எழுதுக.

ஆ). அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

**8. ஏதேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. (3)**

அ). எம்.ஜி இராமச் சந்திரனைப் பற்றி எழுதுக.

ஆ). நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் - குறிப்பு வரைக.